

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், நிதிநுட்ப நகரத்தில் 2.26 ஏக்கரில் 249 கோடி ரூபாய் செலவில் இரண்டு அடித்தளங்கள், தரை மற்றும் பதினொன்று தளங்களுடன் 5.56 லட்சம் சதுர அடி பரப்பளவில், அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நிதிநுட்ப கோபுரத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், டிட்கோ தலைவர் திருமதி சந்தியா வேணுகோபால் சர்மா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டிட்கோ நிர்வாக இயக்குநர் திருமதி சுவேதா சுமன், தொழில் மற்றும் நிதி துறையைச் சார்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், நிதிநுட்ப நகரத்தில் 249 கோடி ரூபாய் செலவில் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நிதிநுட்ப கோபுரத்தை திறந்து வைத்து. M/s. Prime Forex Pvt. Ltd., M/s. Simptra Technologies Pvt. Ltd., மற்றும் M/s. MidFin Wealth Pvt. Ltd. ஆகிய நிறுவனங்களுக்கு நிதிநுட்ப கோபுரத்தில் அலுவலக இடங்கள் ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், டிட்கோ தலைவர் திருமதி சந்தியா வேணுகோபால் சர்மா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டிட்கோ நிர்வாக இயக்குநர் திருமதி சுவேதா சுமன், தொழில் மற்றும் நிதி துறையைச் சார்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை நந்தம்பாக்கம் நிதி நுட்ப நகரத்தில்

# ரூ.249 கோடியில் 2.26 ஏக்கரில் கட்டப்பட்ட நிதி நுட்ப கோபுரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 3 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், நிதிநுட்ப நகரத்தில் 2.26 ஏக்கரில் 249 கோடி ரூபாய் செலவில் இரண்டு அடித்தளங்கள், தரை மற்றும் பதினொன்று தளங்களுடன் 5.56 லட்சம் சதுர அடி பரப்பளவில், அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நிதிநுட்ப கோபுரத்தை திறந்து வைத்தார்.**

உலகம் டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் நிதிநுட்ப துறை சார்ந்த வேலை வாய்ப்புகளை உருவாக்கி, நிதிநுட்ப துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.06.2023 அன்று சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் 56 ஏக்கர் நிலப்பரப்பில், நிதிநுட்ப நகரம் (FinTech City) அமைப்பதற்கும், அதில் முதற்கட்டமாக 5.56 லட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) என்ற அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார். இந்த நிதிநுட்ப கோபுரக் கட்டடம் 249 கோடி ரூபாய் செலவில் இரண்டு அடித்தளங்கள், தரை மற்றும் பதினொன்று தளங்களுடன் 5.56 லட்சம் சதுர அடி பரப்பளவில், அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை தொடங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் உள்ள உயர்தர அலுவலக இடங்கள் நிதிநுட்ப கோபுரத்தில் (Fintech Tower) அமைக்கப்பட்டுள்ளன. LEED Platinum Green Building தரத்துடன் உருவாக்கப்பட்ட இக்கட்டடம், வாகன நிறுத்த வசதிகள், 250 மற்றும் 50 இருக்கை வசதிகளைக் கொண்ட கூட்டரங்கங்கள், உணவகங்கள், உடற்பயிற்சிக் கூடம், குழந்தைகள் பராமரிப்பு மையம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. தடையற்ற வணிக சூழலை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உலகத் தரத்திலான உள்கட்டமைப்புடன் உருவாக்கப்பட்ட இக்கட்டடம், தமிழ்நாட்டின் நிதிநுட்ப வளர்ச்சிக்கான முக்கிய மையமாக திகழும்.

இந்நிகழ்ச்சியின்போது, M/s. Prime Forex Pvt. Ltd., M/s. Simptra Technologies Pvt. Ltd., மற்றும் M/s. MidFin Wealth Pvt. Ltd. ஆகிய நிறுவனங்களுக்கு நிதிநுட்ப கோபுரத்தில் அலுவலக இடங்கள் ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், டிட்கோ தலைவர் திருமதி சந்தியா வேணுகோபால் சர்மா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டிட்கோ நிர்வாக இயக்குநர் திருமதி சுவேதா சுமன், தொழில் மற்றும் நிதி துறையைச் சார்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - சமத்துவ மக்கள் கழகம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் தலைமையில் பொருளாளர் எம்.கண்ணன், இளைஞர் செயலாளர் கார்த்திக் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மூவேந்தர் முன்னேற்றக் கழகம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் தலைமையில் அமைப்புச் செயலாளர் ஜி.எம்.ஆர்.வைபவ் வாண்டையார், ஆட்சிமன்றச் செயலாளர் நம்பிவயல் ரவீந்திரன், மாநிலத் துணைத் தலைவர் டி.விப்ர நாராயணன் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மக்கள் விடுதலைக் கட்சி பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மக்கள் விடுதலைக் கட்சி நிறுவனத் தலைவர் கே.முருகவேல் ராஜன் தலைமையில், பொதுச் செயலாளர் ஏ.ராஜி, செயல் தலைவர் என்.அபி சுரேஷ், அமைப்புச் செயலாளர் சி.சரவணன், துணைப் பொதுச் செயலாளர் ஆர்.செல்வகுமார் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

# ‘திராவிட மாடல்’ முதல்வரால் ஒளிரும் திருக் கோவில்கள்!

## ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச், 3 -

“தினத்தந்தி” நாளேடு தமிழ்நாட்டில் உள்ள கோவில்கள் அனைத்திலும் நன்கு பூசைகள் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது எனவும் 'திராவிட மாடல்' முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் ஒளிரும் திருக்கோ வில்கள் என்று பாராட்டியுள்ளது.




இதுகுறித்து தினத்தந்தி நாளேடு எழுதியுள்ள தலையங்கம் வருமாறு:-

தமிழ்நாடு ஒரு ஆன்மிக பூமி. இதற்கு பல்லாயிரம் ஆண்டுகள் வரலாறுகளை சுமந்து கொண்டு விண்ணை முட்டும் அளவுக்கு வளர்ந்து நிற்கும் கோவில்களே சாட்சி. நமது மூதாதையர்கள் குறிப்பாக மன்னர்கள், மக்களிடம் ஒற்றுமை என்ற கருத்தை விதைப்பதற்காக நிறைய கோவில்களைக் கட்டி எழுப்பியிருக்கிறார்கள். மக்களும் கோவிலை சார்ந்து நெறிப்பாட்டுடன் தங்களது வாழ்க்கைமுறையை கட்டமைத்தனர். தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் 43,728 கோவில்கள் உள்ளன. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து கோவில்களில் அன்றாட பூஜைகள், திருப்பணிகள், கும்பாபிஷேகம் என ஒவ்வொரு விழாக்களையும் இந்து சமய அறநிலை யத்துறை சிறப்பாக செய்துவருகிறது.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்' என்ற திருக்குறளுக்கேற்ப

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக எப்போதும் பக்தி பழமாக வெண் தாடியுடன் வலம் வரும் சேகர்பாபுவை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நியமித்தார். அவரும் கோவில்களில் பூஜைகள் ஆகம விதிப்படி நடக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறார். வருமானம் உள்ள கோவில்களில் தினமும் 5 கால பூஜைகள், முக்கால பூஜைகள் நடக்கின்றன. ஆனால் சிறிய கோவில்களில் வருமானம் இல்லாததால் ஒருகால பூஜை கூட நடக்காமல் அங்கு வீற்றிருக்கும் தெய்வங்களை மக்கள் முறையாக வழிபடமுடியாத நிலை இருந்தது.

ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில், யாரும் கவனிக்காமல் பூஜைகளும் நடக்காமல் இருந்த சிறிய கோவில்களில் ஒருகால பூஜையாவது நடக்கவேண்டும் என்பதற்காக 12 ஆயிரத்து 959 கோவில்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வைப்பு நிதி போட்டு, அதில் இருந்து கிடைக்கும் வட்டியில் இருந்து ஒருகால பூஜை நடத்த ஏற்பாடு செய்தார். பின்பு இந்த தொகை ரூ.1 லட்சமாக உயர்த்தப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றப்பிறகு கோவில்களின் எண்ணிக்கை 17 ஆயிரமாக உயர்த்தப்பட்டு ஒருகால பூஜைக்கான வைப்பு நிதி முதலில் ரூ.2 லட்சமாகவும் பின்பு ரூ.2.5 லட்சமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்து இந்த கோவில்களின் எண்ணிக்கை 19 ஆயிரமாக அதிகரித்துள்ளது. ஆக இந்த கோவில்களுக்கும் ஒருகால பூஜை நடப்பதற்கு தேவையான பூஜை உபகரணங்களாக 3 கிண்ணங்கள் கொண்ட சொம்பு, தூபக்கால், மணி, காமாட்சி விளக்கு மற்றும் பஞ்ச பாத்திரம் ஆகியவை முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல் இந்த கோவில்களில் ஒருகால பூஜை செய்யும் அர்ச்சகர்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியம் ஆயிரம் ரூபாயில் இருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கோவில்களில் மின் கட்டணத்தையும் இந்து சமய அறநிலையத்துறையே கட்டுகிறது. மேலும் ஒருகால பூஜை நடக்கும் கோவில்களின் அர்ச்சகர்கள் குழந்தைகள் உயர் கல்வி பெற தலா ரூ.10 ஆயிரம் வீதம் 1,500 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆக தமிழ்நாட்டில் அனைத்து கோவில்களிலும் ஒருகால பூஜையாவது நடந்து, அங்கு வீற்றி ருக்கும் கடவுள்களுக்கு முறைப்படி வழிபாடு நடக்கவும், இஷ்ட தெய்வங்கள் மனம் குளிர்ந்து பக்தர்களின் பிரார்த்தனைகளை நிறைவேற்றவும் கோவில்களின் நடைகள் திறக்கப்பட்டுள்ளன. கோவில் மணி ஒலித்து, தெய்வங்களை ஆராதிக்கும் தீபம், மனம் உருக வேண்டும் பக்தர்களின் வேண்டுதல்களை பூர்த்தி செய்ய சுடர் விட்டு பிரகாசிக்கும். பொதுவாக கோவில்களின் பராமரிப்பு ஆன்மிக பெரியோர்கள், மடாதிபதிகள் பொறுப்பில் இருக்கவேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கருநாடக மாநிலம் கோலார் தங்கவயல் நகர தி.மு.க. சார்பில் முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது ஆண்டு பிறந்த நாள் விழா அருணாசலம் தலைமையில் கழக முன்னோடிகள், மாநில கழக முன்னாள் அமைப்பாளர் ந.ராமசாமி, மாநில தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் போர்முரசு கதிரவன் மற்றும் தங்கவயல் நகர மன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினாகள் ஜெயபால், இடதுசாரி உறுப்பினர் தங்கராஜ், கழக வழக்கறிஞர் மணிவண்ணன், சாரங்கபாணி, வ.முனிரத்தினம், நித்தியானந்தம், பரணி பிரகாஷ் பங்கேற்றனர்.